
தமிழரசு
அலுவலகப் பிரதி



# அரசின் திட்டங்களைப் போற்றும் மக்களின் துணையோடு முன்னேறிச் செல்வோம்

# நாளை நமதே! வெற்றி நமதே!

சட்டப்பேரவையில்,

மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்து

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஆற்றிய உரை (13.01.2011)

தமிழரசு
அலுவலகப் பி

# அரசின் திட்டங்களைப் போற்றும் மக்களின் துணையோடு முன்னேறிச் செல்வோம்

# நாளை நமதே! வெற்றி நமதே!

சட்டப்பேரவையில்,

மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்து

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஆற்றிய உரை (13.01.2011)

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

சிறப்பு வெளியீடு எண்.39

தமிழரசு இலவச வெளியீடு

ஜனவரி 2011

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

# அரசின் திட்டங்களைப் போற்றும் மக்களின் துணையோடு முன்னேறிச் செல்வோம் நாளை நமதே! வெற்றி நமதே!

சட்டப்பேரவையில்,
மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை (13.01.2011)

கனவு மெய்ப்பட வேண்டும் என்று பாரதி பாடினான். ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு உண்டு. குழந்தைக்கு பால் கனவு; மாணவனுக்கு தேர்வு கனவு; வாலிபனுக்கு காதல் கனவு; தொழிலாளிக்கு ஊதியம் கனவு; முதலாளிக்கு இலாபம் கனவு; கவிஞனுக்கு கற்பனை கனவு; அதிகாரிக்கு கோப்பு கனவு; ஆட்சியாளர்களுக்கு சாதனை கனவு; நல் அரசியல்வாதிகளுக்கு மக்கள் நலனே கனவு. கௌதம புத்தர் கனவு கண்டார், அது அவரை ஆரிய வைரியாக்கியது; அலெக்சாண்டர் கனவு கண்டார், அது அவரை அகிலத்தின் மாவீரனாக்கியது; கரிகாலர் கனவு கண்டார், அது அவரை

கல்லணை பொறியாளராக்கியது; ராஜ ராஜ சோழர் கனவு கண்டார், அது அவரை பெருவுடையார் கோயில் புகழ் தச்சராக்கியது, ஷேக்ஸ்பியர் கனவு கண்டார், அது அவரை நாடகத் தந்தையாக்கியது; கீட்ஸ் கனவு கண்டார், அது அவரை கவின்மிகு கனவுக் கவிஞராக்கியது; காரல் மார்க்ஸ் கனவு கண்டார், அது அவரை உலகப் பாட்டாளிகளின் பாது காவலனாக்கியது; மாவோ கனவு கண்டார், அது அவரை செஞ்சீனத்தின் சிற்பியாக்கியது; அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார், அது அவரை இந்திய நாட்டின் தந்தையாக்கியது; பண்டித நேரு கனவு கண்டார், அது அவரை ஆசிய ஜோதியாக்கியது; அம்பேத்கர் கனவு கண்டார், அது அவரை ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாவலனாக்கியது; தந்தை பெரியார் கனவு கண்டார், அது அவரை எஃகு நாத்திகராக்கியது; காமராஜர் கனவு கண்டார், அது அவரை கல்விக் கண் திறந்த பெருந் தலைவராக்கியது; அண்ணா கனவு கண்டார், அது அவரை அனைவருக்கும் அன்பான அண்ணனாக்கியது; அதுபோல ஐந்தாவது முறையாக ஆட்சிபீடம் ஏறி ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும், ஓய்வுக்கே ஓய்வுகொடுத்து உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் கனவொன்று உண்டு. பசியும், பிணியும் அற்ற தமிழகமாக, கல்வியில் சிறந்த தமிழகமாக, உழவில் உயர்ந்த தமிழகமாக, தொழிலில் சிறந்த தமிழகமாக, செம்மொழியாம் தமிழ் மொழி மீது தணியாத பற்று கொண்ட தமிழகமாக தமிழ்நாடு ஆக வேண்டும் என்கிற கலையாத கனவு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அந்தக் கனவை நனவாக்கும் சாதனைகளின் தொடர்ச்சியே இந்த ஆளுநர் உரை.

## புதிய சட்டமன்றத்தில் முதன்முதலாக பதிலளிக்கக்கூடிய வாய்ப்பு

இந்தப் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, கடந்த 7ஆம் தேதியன்று முதன்முதலாக ஆளுநர் உரை. மேதகு ஆளுநர் அவர்களால் படிக்கப்பட்ட அந்த உரையின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்கு பதிலளிக்கக்கூடிய, அதுவும் இந்த புதிய சட்டமன்றத்தில் முதன்முதலாக பதிலளிக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், அதற்கு அனுமதி தந்த சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், குறிப்பாக இந்த அவைக்கும் நான் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிருக்கக்கூடிய உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, உறுப்பினர்கள் கு. பிச்சாண்டி, அன்பழகன், கம்பம் ராமகிருஷ்ணன், திருமதி சங்கரி நாராயணன், ராஜேந்திரன், அ.தி.மு.க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் எஸ். ஜெயகுமார், பி. தங்கமணி, செந்தமிழன், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எஸ். பீட்டர் அல்போன்ஸ், சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், கோவை தங்கம், விஜயகுமார், டாக்டர் ஜெயக்குமார், வேல்துரை, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஜி.கே. மணி, கோ. எதிரொலி மணியன், செந்தமிழ்ச் செல்வன், அ. தமிழரசு, தி.க. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் செல்வி கே. பாலபாரதி, மாரிமுத்து, இந்திய

கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வை.சிவபுண்ணியம், சு. குணசேகரன், ம.தி.மு.க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் டாக்டர் சதன் திருமலைக்குமார், ஞானதாஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் து. ரவிக்குமார் ஆகியோர் தங்களுடைய ஆக்கப்பூர்வமான கருத்துக்களை எல்லாம் இந்த அரசுக்கு தேவைப்படக்கூடிய வகையில் தங்களுடைய உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்கட்சியினுடைய உறுப்பினராக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் துவக்கத்தில் சொன்னார், இந்த ஆளுநர் உரையைப் பார்த்து நாடே சிரிக்கிறது என்று. யார் சிரிக்கிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஒருவேளை அது அவருடைய கோளாறாகக்கூட இருக்கலாம். வேண்டுமென்றால் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திலே நாங்கள் பரிந்துரை செய்து, அவருக்கு சிகிச்சை அளிப்பதற்குக்கூட தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையென்பது வெறும் காகிதம் அல்ல, இது ஒரு காலக் கண்ணாடி. நான்கரை ஆண்டு சாதனைகளுக்கான நற்றமிழ்ச் சான்று. இனி ஆற்ற இருக்கக்கூடிய பணிகளுக்கான அறிமுகம். இந்த உரையில் இருப்பவை வெறும் சொற்கள் அல்ல. இந்த அரசினுடைய முன்னேற்றத்தை குறிக்கக் கூடிய மைல்கற்கள்.

ஆளுநர் உரையைப்பற்றி பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள், பல்வேறு பத்திரிகைகள்,

அதேபோல் இந்த அவையில் இருக்கக்கூடிய உறுப்பினர் பெருமக்கள் பாராட்டியும், விமர்சித்தும் தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாநிலச் செயலாளராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய ராமகிருஷ்ணன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மூத்த உறுப்பினர்களில் ஒருவராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய நல்லக்கண்ணு அவர்கள் இந்த ஆளுநர் உரையைப்பற்றி குறிப்பிட்டு சொல்கின்றபோது, வரக்கூடிய தேர்தலைக் கருத்திலே கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய தேர்தல் அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார். உள்ளபடியே இது எங்களுக்கு மகிழ்ச்சிதான். நாட்டிலே இன்றைக்கு எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. தேர்தல் களத்திலே சில கட்சிகள் போட்டியிடுகின்றன. போட்டியிடக் கூடிய கட்சிகள் எல்லாம், தேர்தல் நேரத்திலே வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை வழங்குவதுண்டு. அது வழக்கம். அது மரபு. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அதைச் செய்வோம், இதைச் செய்வோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வானத்தை கிழிப்போம், வைகுண்டத்தை காட்டுவோம், மணலைக்கட்டி கயிறாக்குவோம் என்ற நிலையிலே சொல்லக்கூடிய உறுதிமொழிகள் எல்லாம் உண்டு. ஆனால். அதற்கெல்லாம் நேர்மாறாக, விதிவிலக்காக தேர்தல் நேரத்தில் வழங்குகின்ற உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறைவேற்றிக் காட்டியிருக்கக் கூடிய ஆட்சிதான் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக் கூடிய ஆட்சி என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. எனவே, கம்யூனிஸ்டு கட்சியினுடைய

தலைவர் சொன்ன அந்த அடிப்படையிலே ஆளுநர் உரை, தி.மு.க. கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை என்று சொன்னதை நாங்கள் விமர்சனமாக கருதவில்லை. ஒரு பெரிய பாராட்டாகத்தான் நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம் என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**தேர்தல் அறிக்கை பின்னே**
**ஆளுநர் உரை முன்னே**

அதுமட்டும் அல்ல 2006–ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றபோது, அப்பொழுது தேர்தல் பிரச்சாரம் நாடு முழுவதும் நடந்தது. இன்றைக்கு மத்தியிலே உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய ப.சிதம்பரம் அவர்கள் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் அப்பொழுது நிதித் துறை அமைச்சராக இருந்தவர். அவர் அன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நம்முடைய கட்சியினுடைய, கூட்டணி கட்சியினுடைய வேட்பாளர்களை யெல்லாம் வெற்றிப் பெற வைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்டபோது அவர் தன்னுடைய பிரச்சாரத்தில் ஒன்றை மறக்காமல் தொடர்ந்து எடுத்துச் சொன்னார். என்ன என்று கேட்டால், இந்த தேர்தல் களத்திலே, கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கக் கூடிய இந்த தேர்தல் அறிக்கைதான் ஒரு hero – ஒரு கதாநாயகன் என்று குறிப்பிட்டுச் சொன்னார். அதையும் தாண்டி இன்னொன்றையும் குறிப்பிட்டார். பல தொகுதிகளில் அவருடைய காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட, திராவிட முன்னேற்றக்

கழகத்தின் சார்பில் இருக்கக்கூடிய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட, நம்முடைய தோழமைக் கட்சியினுடைய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட அவர் தவிர்த்துவிட்டு, பெயரைக் கூடச் சொல்லாமல், இந்தத் தொகுதியிலே நம்முடைய கூட்டணி வேட்பாளர் யார் என்ற கேட்டால், கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கக் கூடிய தி.மு.கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை தான் என்று அவர் மனம்திறந்து பாராட்டிச் சொன்னார். காரணம், அந்த அளவுக்கு அவருடைய உள்ளத்தில் மட்டுமல்ல, மக்களுடைய உள்ளத்திலும் தி.மு. கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை ஆழமாகப் பதிந்த காரணத்தால் ஒரு மிகப் பெரிய வெற்றியைப் பெற்று நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். ஆகவே, கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர்கள் சொன்னதுபோல ஆளுநர் உரை ஒரு தேர்தல் அறிக்கை தான். ஆக, 2011 ஆம் ஆண்டிலும் மீண்டும் கழகம்தான், இந்த ஆட்சி தான் மீண்டும் பொறுப்பேற்க இருக்கிறது என்பதற்கு அவர்களே சான்று வழங்கியிருக்கிறார்கள் என்று தான் நான் நம்புகிறேன்.

தேர்தல் அறிக்கையைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பதுபோல, 'தேர்தல் அறிக்கை வரும் பின்னே, ஆளுநர் உரை வந்திருக்கிறது முன்னே' என்பதையும் நான் இந்த நேரத்திலே இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த ஆளுநர்

உரையைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிற போது, தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது, இந்த ஆளுநர் உரை அவல உரையாக அமைந்திருக்கிறது, இந்த ஆளுநர் உரை தொலைநோக்கோடு அல்ல, கொலை நோக்கோடு அமைந்திருக்கக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் கேட்க விரும்புவது, அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, அப்போது அந்த ஆட்சியினுடைய தன்மை எப்படி இருந்தது, மனந்திறந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்ற ஆட்சி எந்த ஆட்சி? அவல நிலைமைக்கு, கொலைநோக்கோடு நடைபெற்ற ஆட்சி எந்த ஆட்சி? அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், எஸ்மா, டெஸ்மா என்ற கொடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அந்தச் சட்டத்தின் காரணமாக என்னென்ன கொடுமைகளெல்லாம் நாட்டிலே நடைபெற்றன? வேலை நியமனத் தடையாணை எந்த ஆட்சியிலே வழங்கப்பட்டது? அரசு ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்கள் பல கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப் படவில்லையா? அவர்களையெல்லாம், ஒரே நாளில் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கி வீட்டிற்கு அனுப்பிய ஆட்சி எந்த ஆட்சி? நான் இன்னும் கேட்கிறேன், மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், அவர்கள் செய்த தவறு என்ன? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நியமிக்கப்பட்டார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக அவர்களையும் வீட்டிற்கு அனுப்பிய ஆட்சி எந்த ஆட்சி? ஆக, அரசு ஊழியர்களும், ஆசிரியர் பெருமக்களும்,

மக்கள் நலப் பணியாளர்களும், சாலைப் பணியாளர்களும் நடுத்தெருவிற்கு வந்து போராட வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு, கொடுமை தாங்க முடியாத காரணத்தால் பலபேர் தற்கொலை செய்து கொண்டு மாண்ட கொடுமை களெல்லாம் எந்த ஆட்சியிலே நடந்தது? ஆக, அவர்கள் இந்த ஆட்சியைப் பற்றி, இந்த ஆளுநர் உரையைப் பற்றி இப்படி குறிப்பிடுகிறார்களே? எனவே, நான் அழுத்தந்திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன், இந்த ஆளுநர் உரை அழிவுப் பாதைக்கு அல்ல, ஆக்கப்பூர்வமான பாதைக்கு அழைத்துச் செல்லக் கூடிய உரையாக இது அமைந்திருக்கிறது. அவல உரையாக அல்ல, வளமான உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. கொலைநோக்கோடு அல்ல, தொலைநோக்கோடு அமைந்திருக்கக்கூடிய உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

மழை வருகிறபோதெல்லாம் பாதிப்பு அடையும் நாகை, திருவாரூர், தஞ்சை, கடலூர் மாவட்டங்களுக்கெல்லாம் நிரந்தரமாக '**சிறப்பு வெள்ள மேலாண்மைத் திட்டத்தை**' அறிவித்திருக்கிறோமே, இது என்ன தொலைநோக்குத் திட்டமாக அவர்களுக்குத் தெரியவில்லையா? சரபங்கா நதி, திருமணிமுத்தாறு மற்றும் அய்யாறு நதிகளின் உபரிநீரைப் பயன்படுத்தி சேலம், நாமக்கல், திருச்சி மாவட்டங்களுக்கு பயனளித்திடும் திட்டத்தை அறிவித்திருக்கிறோமே இது தொலைநோக்குத் திட்டமாக தெரியவில்லையா?

**686** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டினுடைய வன வளத்தைப் பாதுகாக்க ஒரு பெரிய திட்டத்தையே

அறிவித்திருக்கிறோமே, இது என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா? 480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிழக்குக் கடற்கரை மற்றும் தென்னகச் சுற்றுலா மையங்களை மேம்படுத்த பெரிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோமே, இது என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா? சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மூலக்கடை – திருமங்கலம், மூலக்கடை –திருவான்மியூர், லஸ்–பூவிருந்தவல்லி போன்ற வழித்தடங்களை அறிவித்திருக்கிறோமே இது என்ன தொலை நோக்குத் திட்டமாக அவர்களுக்குத் தெரியவில்லையா? கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் எந்த ஒரு மின் உற்பத்தித் திட்டமும் செயல்படுத்தாத நிலையில், வட சென்னையில் 4,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 மெகாவாட் அனல் மின் திட்டம். மேட்டூரிலே 3,100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 600 மெகாவாட் அனல் மின் திட்டம். வல்லூரிலே 9,000 கோடி ரூபாய் செலவில் 1,500 மெகாவாட் அனல் மின் திட்டம். தூத்துக்குடியில் 4,909 கோடி ரூபாய் செலவில் 1,000 மெகாவாட் அனல் மின் திட்டம். உடன்குடியிலே 9,000 கோடி ரூபாய் செலவிலே 1,000 மெகாவாட் அனல் மின் திட்டம். பவானி மற்றும் பெரியார் அணைகளில் 1,255 கோடி ரூபாய் செலவிலே 93 மெகாவாட் புனல் மின் உற்பத்தி. 12 கூட்டுறவு மற்றும் அரசு சர்க்கரை ஆலைகளில் 1,126 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 183 மெகாவாட் மின் உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமே, இவையெல்லாம் தொலைநோக்குத் திட்டங்களாக அவர்களுக்குத் தெரியவில்லையா!

சென்னை, அதைச் சுற்றியிருக்கக்கூடிய புறநகர் பகுதிகள், மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, ஈரோடு, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், தூத்துக்குடி போன்ற மாநகராட்சிகளில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நகராட்சிப் பகுதிகளில் 15,000 கோடி ரூபாய் செலவிலே அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்குத் திட்டம் போட்டிருக்கிறோமே இவையெல்லாம் தொலைநோக்குத் திட்டங்களாக அவர்களுக்குத் தெரியவில்லையா!

மத்திய அரசின் நிதியுதவியைப் பெற்று நிறைவேற்றிவரக் கூடிய இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், I.A.Y என்கிற அந்தத் திட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டி பழுதடைந் திருக்கக்கூடிய வீடுகளையெல்லாம் சீரமைக்க வீடு ஒன்றுக்கு 15,000 ரூபாய் நிதி வழங்க முடிவு எடுத்திருக்கிறோமே இது என்ன தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

மீனவர்களின் நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோமே இது என்ன அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

பட்டதாரியே இல்லாத குடும்பங்களிலிருந்து தொழிற்கல்வி பயில ஒற்றைச் சாளர முறையிலே ஒதுக்கீடு பெறக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணத்தை முழுமையாக அரசே ஏற்கும் என்று அறிவித்த காரணத்தால் இந்த ஆண்டு 80,450

மாணவர்கள் பயன் பெற்றிருக்கிறார்களே இது என்ன தமிழகத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

நெம்மேலியில், நாகலாபுரத்தில், அரூரில், கள்ளக் குறிச்சியில், திருச்சுழியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கீவளூரிலே புதிதாக விவசாயக் கல்லூரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே தோட்டக்கலை பல்கலைக்கழகம். இப்படி உருவாக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோமே, இவையெல்லாம் தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

ராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளும், கன்னியாகுமரியிலே இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி பல்கலைக்கழகம் தொடங்க அறிவிக்கப்பட்டிருக்கிறதே, இவை என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

பஞ்சமி நிலம் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி ஆராய ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலே குழு, கிராமச் சாலைகளை மேம்படுத்த நபார்டு வங்கியின் உதவியை எதிர்நோக்கி 320 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது. இவையெல்லாம் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா!

வெளிநாட்டில் பணிபுரியக்கூடிய தமிழர்களின் நலனுக்காக நலவாரியம் ஒன்றை அமைத்திருக்கிறோமே இது என்ன தொலைநோக்குத் திட்டமாகத் தெரியவில்லையா!

மகாபாரதத்திலே கதை ஒன்று உண்டு. அதுதான் இப்போது என்னுடைய நினைவுக்கு வருகிறது. என்ன வென்று கேட்டால், குருவாக இருக்கக்கூடிய துரோணர் – ஒருநாள் தருமனையும், துரியோதனையும் அழைத்து நாட்டில் நல்லவர்கள் எத்தனை பேர், கெட்டவர்கள் எத்தனை பேர் என்று நீங்கள் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு எனக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று உத்தரவிட்டாராம். ஆக, தருமனும், துரியோதனனும் இருவரும் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு தங்களுடைய குருவினிடத்திலே வந்து சொன்னார்களாம். முதலில் தருமன் சொல்கிறான் –குருவிடம் சென்று தருமன் சொல்கிறான் – நாட்டிலுள்ள எல்லோரிடமும் சில நல்ல குணங்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லோரும் நல்லவர்கள் என்று குறிப்பிட்டானாம். ஆனால், துரியோதனன் சொன்னானாம், நாட்டிலுள்ள எல்லோரிடமும் சில கெட்ட குணங்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லோரும் கெட்டவர்கள் என்று சொன்னானாம். இது எதைக் காட்டுகிறது, 'காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்பதுபோல, "The beauty lies in the eyes of the beholder" என்பார்களே, அதுதான் இப்பொழுது என்னுடைய நினைவுக்கு வருகிறது.

### விலைவாசியை கட்டுப்படுத்த அரசின் நடவடிக்கைகள்

அடுத்து, விலைவாசி. விலைவாசியைப் பற்றி இந்த அவையிலே நீண்ட நேரம் விவாதிக்கப் பட்டிருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் – எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி – என்ற

பாகுபாடில்லாமல் விலைவாசியைப் பற்றி இந்த அவையிலே நாம் விவாதித்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக, நேற்றைய தினம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு சரியான விளக்கத்தை, எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய, நிலையிலே, அவர் ஆணித்தரமாக, அழுத்தமாக அதைப் பற்றி இங்கே குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். எனவே, நான் அதைப் பற்றி அதிகம் இங்கு விளக்கம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் நான் குறிப்பிட விரும்புவது, விலைவாசி உயர்வைப் பற்றி பேசுகிறபோது அது எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியைப் பற்றி சொல்லப் படக் கூடிய குற்றச்சாட்டுகளில் அது முக்கியமாக இருப்பதை நாம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உள்ளூர் பிரச்சினை மட்டுமல்ல, அகில இந்திய அளவில் இருக்கக் கூடிய பிரச்சினை மட்டுமல்ல, உலக அளவில் இருக்கக் கூடிய பிரச்சினை என்பதை யாரும் மறுத்திட முடியாது. கடந்த 2, 3 நாட்களாக டெல்லியிலும்கூட நம்முடைய பாரத பிரதமர் அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய மூத்த அமைச்சர்களை எல்லாம் அழைத்து, பல நேரங்களில் இதுபற்றி பேசி, இதை எப்படி கட்டுப்படுத்துவது என்கிற முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் செய்தித்தாள்களில் பார்க்கிறோம், தொலைக் காட்சிகளிலும் அந்தச் செய்திகளைப் பார்க்கிறோம். இன்னும்கூட சொன்னால், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த, அதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்காக "Core Committee" என்ற ஒரு கமிட்டியைக்கூட நம்முடைய பிரதமர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர், இன்றைக்கு குஜராத்

மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருக்கக் கூடிய நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஓர் உறுப்பினராக இடம் பெற்றிருக்கிறார். ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர், மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னும் பலர் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழு இரண்டு முறை டெல்லியிலே இது வரை கூடியிருக்கிறது. அந்தக் குழுக் கூட்டத்திற்கு தமிழகத்தின் சார்பில் நம்முடைய முதல்வர் அவர்கள் சார்பில் நான் பங்கேற்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றேன். அப்படி வாய்ப்பைப் பெற்றபோது நம்முடைய அரசினுடைய கொள்கைகளை, நம்முடைய முதல்வர் அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் அந்தக் கூட்டத்திலே பரிந்துரைகளாக நான் எடுத்து வைத்திருக்கிறேன். அது உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆக, இந்த நிலையிலே தான் நான் குறிப்பிட விரும்புகிறேன், நம்முடைய அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றி நான் இங்கே குறிப்பிட்டு சொல்லவேண்டுமென்றுச் சொன்னால் இங்கேகூட அமைச்சர் பெருமக்கள் சில நேரங்களில் உங்களுக்கு பதில் சொல்கிறபோது இந்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

ஆகவே, விலைவாசியைக் கட்டுப்படுத்துகிற முயற்சியிலே நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவேண்டுமென்று சொன்னால் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கக்கூடிய திட்டம். அதேபோல சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை, மிகச்

சிறப்பான வகையிலே நாம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மானிய விலையிலே 10 மளிகைப் பொருட்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் எதற்காக? ஏழையெளிய மக்களை பொறுத்தவரையிலே இந்த விலைவாசி பிரச்சினையிலே அவதிக்கு ஆளாகிவிடக்கூடாது, பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான், இந்த நடவடிக்கைகளை எல்லாம் தொடர்ந்து நாம் எடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மக்களுடைய வாங்கும் சக்தியை உயர்த்தக்கூடிய நிலையிலே பல்வேறு திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, மத்திய அரசின் துணையோடு நாம் இன்றைக்கு நிறைவேற்றி கொண்டிருக்கிறோமே இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, நம்முடைய தமிழ்நாட்டிலே, 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை' இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமே அந்தத் திட்டத்தின் மூலமாக 2010–2011ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை நம்முடைய தமிழகத்தில் இருக்கக் கூடிய ஊரகப் பகுதிகளில், ஏழையெளிய மக்களுக்கு 1,847 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இதனுடைய பொருள் என்ன? வாங்கும் சக்தி அதிகரித்து இருக்கிறதா? இல்லையா?

அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற உடனே, தேர்தல் நேரத்தில் வழங்கிய அந்த உறுதிமொழிகளை எல்லாம் காப்பாற்றுகிற, நிறைவேற்றுகிற நேரத்தில், முதல் திட்டமாக ஒரு

கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு நிறைவேற்றக் கூடிய அந்தத் திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு நிறைவேற்றினார்கள். அடுத்து, இரண்டாவதாக, விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கக் கூடிய கடன், ஏழாயிரம் கோடி ரூபாய். அதை முழுமையாகத் தள்ளுபடி செய்வேன் என்று தேர்தல் நேரத்தில் தந்த உறுதி மொழி. அதற்காக கையொப்பமிட்டு ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்து, அதனால் பல இலட்சக்கணக்கான விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைத்து அவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தார். அதனால் என்ன பயன் என்று கேட்டால், அவர்கள் வாங்கும் சக்தி, அவர்களுடைய கையிருப்பு, முதலீட்டுத் தொகை இதனால் அதிகரித்து இருக்கிறதா ? இல்லையா ? நான் இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். இதனால் இங்கிருக்கக்கூடிய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், இவர்கள் எந்த அளவுக்கு இலாபம் பெற்றார்கள், பலன் பெற்றார்கள் அவர்களால் மறுக்க முடியுமா ? நான் இன்னும்கூட ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்வதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் கையொப்பமிடுகிற நேரத்திலே எங்களைப் போன்றவர்கள் எல்லாம் நம்முடைய முதல்வரிடத்திலே நாங்கள் வைத்த ஒரு கோரிக்கை.

எங்களுடைய உள்ளத்தில் தோன்றிய அந்த உணர்வை நாங்கள் முதல்வரிடத்திலே வெளிப்படுத்தினோம். என்னவென்று கேட்டால், ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி

செய்கின்றீர்களே, ஒரு கோடியல்ல இரண்டு கோடியல்ல, 10 கோடியோ 20 கோடியோ அல்ல, ஐநூறோ ஆயிரமோ அல்ல, ஏழாயிரம் கோடி ரூபாய், இதைத் தள்ளுபடி செய்கின்றீர்களே இதனால் யாருக்கு அதிக இலாபம் என்று கேட்டால், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள்தான் இதனால் அதிக இலாபம் பெறுகின்றார்கள். ஆகவே, இது நியாயமா என்று எங்களுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்வை எடுத்துச் சொன்னோம். உடனே நம்முடைய முதல்வர் அவர்கள் எங்களிடத்திலே என்ன விளக்கம் தந்தார் என்று கேட்டால், நான் ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்கின்றேன் என்று சொன்னால், நான் அவர்களையெல்லாம் ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய தி.மு.க.வாகப் பார்க்கவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வாகப் பார்க்கவில்லை. தோழமைக் கட்சியாக இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியாகப் பார்க்கவில்லை. பாட்டாளி மக்கள் கட்சியாகப் பார்க்கவில்லை. கம்யூனிஸ்டு கட்சிகளாகப் பார்க்கவில்லை. நான் அவர்களை யெல்லாம் ஒட்டுமொத்தமாக விவசாயப் பெருங்குடி மக்களாகப் பார்க்கிறேன். என்னுடைய இனத்து மக்களாக பார்க்கிறேன் என்று எங்களுக்கு எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தார்.

அதனால் அதிகமான அளவிற்கு அவர்கள்தான் அதிக இலாபம் பெற்றிருக்கிறார்கள் என்பதும் உண்மை. எவ்வளவு இலாபம் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட,

இந்த அவையில் இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள்கூட இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரத்தையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா ? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தின் மூலமாக பயன் பெற்றவர்கள் விவரம் இந்தப் பட்டியலில் உள்ளது. அ.தி.மு.க.–வினுடைய பொறுப்பில் இருக்கக்கூடிய, உறுப்பினர் களாக இருக்கக் கூடியவர்கள், அவர்களில் சிலர் பற்றிய பட்டியல் மட்டும் என்னிடம் இப்போது இருக்கிறது. சாம்பிளுக்கு ஒன்றைச் சொல்கிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்திலே கே. குமார், பாராளுமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி, தளவாய் பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திலே 1,15,691 ரூபாய் அவருடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய உடுமலைப்பேட்டை தொகுதியைச் சேர்ந்த சி. சண்முகவேலு, குமரலிங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திலே 1,39,120 ரூபாய், அவருடைய துணைவியார் திருமதி மனோன் மணி, குமரலிங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கக் கடன் 1,37,750 ரூபாய்.

**விவசாயம் சார்ந்த பொருள்களின்**
**கொள்முதல் விலையை உயர்த்தினோம்**

ஆக, நான் ஏதோ குறை சொல்லவேண்டும், குற்றம் சொல்லவேண்டும் என்பதற்காக–அவர்களுடைய மதிப்பைக் குறைத்துப் பேசவேண்டுமென்பதற்காக என்று அவர்கள் கருதக்கூடாது. நானும் அதைக் கருதவில்லை. ஆனால்

உண்மை நிலையை, கட்சிக்கு அப்பாற்பட்டு கட்சி சார்பற்ற முறையிலே இந்த ஆட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இவைகளெல்லாம் ஒரு சாட்சியாக, சான்றாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய கடன்கள் மட்டுமல்ல. நெல், கரும்பு, பால் போன்ற விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருள்களுடைய கொள்முதல் விலையை உயர்த்தி, வாங்குபவர்களுடைய திறனை நாம் அதிகரித்திருக்கிறோம். அதுமட்டுமா, அரசு அலுவலர்களுடைய ஊதியத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

அரசுத் துறைகளில் 5,05,314 பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திருக்கிறோம். பல்வேறு மாவட்டங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, தனியார் நிறுவனங்களில் 1,34,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். தொழிலாளர் நலத் துறையின் சார்பில், இளைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்தி, சுமார் 18,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கின்றோம். மேலும், தொழில் வளர்ச்சியின் காரணமாக சுமார் 11,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம்.

எனவே, இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரித்திருக்கிறோம் என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது. இருந்தாலும் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற முயற்சியிலே, அது மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில

அரசாங்கமாக இருந்தாலும் சரி, அதிலே எந்த அளவிற்கு முனைப்போடு செயல்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம்.

நாளைய தினம்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் விலைவாசியை எப்படி கட்டுப்படுத்துவது என்பது பற்றி ஆய்வு செய்வதற்கு உயரதிகாரிகளையெல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தைக்கூட நடத்தயிருக்கிறார்கள் என்ற செய்தியை இன்று காலையிலே நீங்கள் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்த வரையில் என்னதான் விலைவாசி ஏறிக்கொண்டிருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நிச்சயமாக கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக் கூடிய இந்த அரசு எல்லா வகைகளிலும் ஈடுபடும் என்பதை நான் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோல, இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கக் கூடிய பல்வேறு சிறப்பான திட்டங்களுக்கெல்லாம் மகுடம் சூட்டக்கூடிய வகையிலே, சிகரம் வைத்தாற் போல் அமைந்திருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம்தான், தலைவர் கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டமாக, பல இலட்சம் ஏழையெளிய மக்களுடைய கனவை நனவாக்கும் திட்டமாக அமைந்த உன்னதமான ஒரு மாபெரும் திட்டம்தான், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டத்தைப் பற்றி கடந்த ஆளுநர் உரையிலே அறிவித்தோம். அதற்குப் பிறகு அதன் தொடக்கவிழா திருச்சியிலே நடைபெற்றது. அந்தத் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில் சட்டமன்றக் கட்சிகளுடைய

தலைவர்களில் ஒரு சிலர் வரவில்லை, ஆனால் பல பேர் அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு வந்து வரவேற்று, பாராட்டி, நன்றி தெரிவித்து உரையாற்றியிருக் கிறார்கள். ஆக நன்றி மட்டும் அல்ல அதேநேரத்தில் கோரிக்கையும் வைத்து அந்த நிகழ்ச்சியிலே பேசியிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் **60** ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. **60** ஆயிரம் ரூபாய் அதற்குப் போதாது. எனவே கொஞ்சம் உயர்த்தித் தரவேண்டும். கொஞ்சம் உயர்த்தித் தரவேண்டும் என்று தான் அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை கூட நமது முதல்வர் அவர்கள் உதாசீனப்படுத்தாமல் பரிசீலனை செய்கிறேன் என்று தான் அந்த விழாவிலே குறிப்பிட்டுச் சொன்னார். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்ததற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விவாதித்து, அதற்குப் பிறகு கோரிக்கைகளின் அடிப்படையிலே **15** ஆயிரம் ரூபாய் உயர்த்தி **75** ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு தமிழ்நாடு முழுவதும் கணக்கு எடுக்கப்பட்டது. தமிழகத்திலே **21** இலட்சம் குடிசை வீடுகள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டு, அந்த **21** இலட்சம் வீடுகளை, அந்தக் குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு அதற்கு மாற்றாக கான்கிரீட் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்து ஆக அந்த **21** இலட்சம் வீடுகளை **6** ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று முடிவை எடுத்து, அதிலே முதல்கட்டமாக இந்த ஆண்டு **3** இலட்சம் வீடுகள் கட்ட முடிவு செய்து, அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. ஆக

இதுவரையிலே 30 ஆயிரம் வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 2 இலட்சம் வீடுகள் பிப்ரவரி மாதம் இறுதிக்குள்ளாக கட்டி முடிக்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**3 இலட்சம் வீடுகளுக்கு இந்த ஆண்டே பணி ஆணைகள் வழங்கப்பட உள்ளன**

இந்தத் திட்டத்தைப் பயனாளிகளே விரும்பி மகிழ்ச்சியோடு வேக வேகமாக அதைக் கட்டிக் கொண்டிருக்கக் கூடியதை கருத்திலே கொண்டு எதிர் வரக்கூடிய ஆண்டிலே கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கக் கூடிய 3 இலட்சம் வீடுகளுக்குப் பணி ஆணைகளை இந்த ஆண்டே வழங்கப்படவிருக்கின்றன. இங்கேகூட நமது சிவபுண்ணியம் அவர்கள் அதேபோல கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆக இந்த ஆண்டு 3 இலட்சம் வீடுகள் தான் அறிவித்திருக்கிறீர்களே அதை ஒரு 6 இலட்சமாக அதை உயர்த்தி அறிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவேதான் அதற்குரிய பணி ஆணையை இந்த ஆண்டே வழங்கி அந்தப் பணியும் தொடங்கப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, ஆக இந்தத் திட்டம் தொடங்கிய முதல் ஆண்டிலேயே 6 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆக இப்படிப்பட்ட சிறப்பான இந்தத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் மட்டும் நிறுத்திவிடாமல் அடுத்த கட்டமாக பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்த கான்கிரீட் வீடுகளைக் கட்ட

முடிவெடுத்து ஆளுநர் உரையிலே அதுவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான உயர்ந்த நிலையில் இருக்கக் கூடிய இந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பாராட்டாமல்கூட இருக்கலாம், ஆனால் கொச்சைப்படுத்தாமல் இருந்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள். தமிழகத்திலே வாழும் ஏழையெளியவர்களுக்கான இந்தத் திட்டத்தைக் கழிவறைத் திட்டம் என்று அவர் வர்ணித்திருப்பது தான் உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. ஆகவே இந்த அரசை அவமதிப்பதாக நான் கருதவில்லை. இத்திட்டத்தின்மூலம் பயன்பெறக் கூடிய ஏழையெளிய குடும்பங்களை அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன்.

மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார், இருக்கிற வீட்டை இடித்து விட்டு செய்வதறியாது ஏழையெளிய மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஒரு ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே ஒரு முறை இந்த வீடுகளைப் பற்றி கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தைப் பற்றி முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையிலே குறிப்பிட்ட போது ஆளும்கட்சிக்காரர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அந்த ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே அதிலே பயன்பெறுவதற்காக இந்தத் திட்டத்தை நடத்துகிறார்கள் என்று ஒரு பத்திரிக்கையிலே, ஒரு பேட்டியிலே, ஒரு அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். நான் அப்போது கேட்டேன். எந்தவித ஆதாரமும் இல்லாமல் சொல்கிறார்,

ஒருவேளை ஆதாரத்தோடு அவர்கள் சொல்வார்கள் என்று சொன்னால் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனவே முன்னாள் முதலமைச்சர், ஒரு பொறுப்பில் இருக்கக் கூடியவர், எதிர்க்கட்சித் தலைவர் எனவே ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று நானே பதில் தந்தேன். ஆனால், இதுவரையிலும் அதற்கு எந்தப் பதிலும் கிடையாது. அதேபோலத்தான் இதுவும். இப்போதும் சொல்கிறேன். இந்தத் திட்டத்தில் எங்காவது குளறுபடிகள், குறைகள் இருந்தால் அவர்கள் அதனைச் சொல்வார்கள் என்று சொன்னால் அதனை நிச்சயமாக இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்தக் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினைப் பொறுத்தவரையில், நேற்றைக்கு நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் வை. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிற போது 75 ஆயிரம் ரூபாய் போதாது என்றும், அதனை இன்னும் உயர்த்தித் தர வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். நான் இந்த அவைக்கு ஒரு செய்தியை நினைவுபடுத்த விரும்புகிறேன். முதன்முதலில் தமிழகத்திலே ஆதிதிராவிட வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வீடு கட்டும் திட்டத்தை 1974ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் அந்தத் திட்டம் முதன்முதலில் தொடங்கப் பட்டது. அதற்குப்பிறகு இப்போது தேசிய அளவிலே, இந்திய அளவிலே, I.A.Y. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் என்ற வகையிலே இப்போது நாடு முழுவதும் அந்தத் திட்டம்

செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு I.A.Y இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய பங்கு 75 சதவிகிதம். மாநில அரசினுடைய பங்கு 25 சதவிகிதம். இந்தத்திட்டத்தில் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு கான்கிரீட் கூரைகள் அமைக்க 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில் இருந்த போது இந்தக் கூரை அமைக்கப்படுவதற்காக மட்டுமே நம்முடைய தமிழக அரசின் சார்பில், தி.மு.க. அரசு சார்பில் ரூ.12,000 கூடுதலாக வழங்கினோம். அந்தத் தொகையும் தற்போது அதிகப்படுத்தப்பட்டு 30,000 ரூபாய் வழங்கிக் கொண்டிருக் கின்றது. அதாவது, ஒரு வீட்டிற்கு ஆகக்கூடிய செலவு மொத்தம் ரூ.75,000/–. மத்திய அரசினுடைய பங்கு ரூ.33,750/–. மாநில அரசினுடைய பங்கு ரூ.41,250/–. அதாவது மாநில அரசு பங்கு 55 சதவிகிதம், மத்திய அரசினுடைய பங்கு 45 சதவிகிதம்.

ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தது என்ன? தி.மு.க. ஆட்சியில் மேற்கூரைக்காக வழங்கப்பட்ட கூடுதல் தொகையாக வழங்கிக் கொண்டிருந்தோமே அந்த தொகை ரூ.12,000/–த்தை குறைத்தார்கள். அதாவது ரூ.12,000/–லிருந்து ரூ.3000/–ஐக் குறைத்து வெறும் 9,000/– ரூபாய் மட்டுமே தந்தார்கள். 2004–2005, 2005–2006 ஆம் ஆண்டுகளில் இது குறைக்கப்பட்டதா இல்லையா? அவர்கள்தான் இப்போது இந்த கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு நிதியை உயர்த்தித்தர வேண்டும் என்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் துணையாக நம்முடைய வை. சிவபுண்ணியம் அவர்களும் இப்போது குரல் கொடுக்கிறார் என்பதுதான்

வேடிக்கையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**வழிகாட்டும் தமிழகம்**

அதேபோல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக, ஒரு முன்னோடி மாநிலமாக பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை பலரும் இன்றைக்குப் பாராட்டி வருகிறார்கள் என்பது உங்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும்.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டை மாத்திரம் நான் குறிப்பிடவேண்டுமென்று சொன்னால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இந்த அவையிலே கூட பலர் அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு செயல்படுத்தக்கூடிய முறையைப் பார்த்து மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் பாராட்டு வழங்கியுள்ளது.

அதைபோல், தமிழகத்திலே செயல்படுத்தக்கூடிய வாழ்ந்து காட்டுவோம் திட்டமே உலக அளவிலே செயல்படக்கூடிய உலக வங்கியின் திட்டங்களில் சிறப்பாக செயல்படும் திட்டமாக உள்ளது என உலக வங்கி பாராட்டி உள்ளது . தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தக்கூடிய முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று மத்திய அரசு பாராட்டி உள்ளது. உலக அளவிலே மோட்டார் வாகன உற்பத்தியிலே மிக

வேகமாக வளரும் மையம் சென்னை என்று Wall Street Journal பத்திரிகை மனந்திறந்து பாராட்டியிருக்கிறது.

ஆக, இப்படி பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய மாநிலமாகத் தமிழகம் உயர்ந்து வருவதைக் கண்டு உங்களுக்கு சோகமா? அதற்காக, கருப்பு சட்டையா?

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, மானிய விலையிலே மளிகைப் பொருட்கள், இலவச எரிவாயு அடுப்புகள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ஒவ்வொரு வீட்டிற்கும் **15,000/–** ரூபாய் நிதியுதவி, சத்துணவில் வாரத்திற்கு ஐந்து முறை முட்டைகள், விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன், படித்த இளைஞர்களுக்கு திறன் பயிற்சி, பணி நியமனம், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம், சிறுபான்மை மக்கள் நலனுக்காகத் தனி இயக்குநரகம், பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியருக்கு **3.5** சதவிகித இடஒதுக்கீடு, அருந்ததியினருக்கு **3** சதவிகித உள்ஒதுக்கீடு, இவைகளெல்லாம் இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது உண்டா?

மனச்சாட்சியைத் தொட்டு நீங்கள் சொல்ல வேண்டும். சொல்லமுடியாத காரணத்தால்தான் உங்களுக்குச் சோகமா? கருப்புச் சட்டையா? சமூக நீதி போற்றி, சமுதாய நலன் போற்றி, சாதி மத பேதம் அகற்றி, சமத்துவம் சகோதரத்துவம் என்ற உணர்வோடு, நல்லிணக்கமும் அமைதியும் காத்து, நலிந்தோர் உதவிகள் நல்கி, கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்தி, வளங்களைப் பெருக்கி வாழும் சமுதாயம் நிம்மதியோடு வாழ வேண்டும், எதிர்கால சமுதாயம் ஏற்றம் பெற வேண்டும், என்ற உணர்வோடு, அனைத்து தரப்பினரும் போற்றக் கூடிய வகையிலே, அண்ணா வழியிலே அயராது உழைத்து, ஆதிக்கமற்ற சமுதாயம் அமைந்திட அனுதினமும் நடைபோட்டு வருகிறதே கலைஞர் அரசு, அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கருப்புச் சட்டை அணிந்துகொண்டு, சோகக் கூச்சல் போடுவோரை சரித்திரம் அடையாளம் வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனவே, கடந்த 5 ஆண்டுகளாக நிறைவேற்றியிருக்கக்கூடிய நல்ல திட்டங்கள் எல்லாம் தமிழகத்தை தலைச் சிறந்த மாநிலமாக உருவாக்க அமைக்கப்பட்டிருக்கக் கூடிய வலுவான அடித்தளம், ஆணிவேர் ஆகும். இந்தப் பணி தொடரும். மேலும், மேலும் தொடரும். இந்த நேரத்தில் அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் ஜனாதிபதி லின்டன் ஜான்சன் கூறிய ஒரு வார்த்தையை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வார்த்தையை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன், "This great, rich, restless country can offer opportunity, education and work to all. These are our enemies - poverty, ignorance and disease. They are our enemies, not our fellowmen, not our neighbours and these enemies we shall overcome." "இந்த மகத்தான வளமான ஓய்வறியா நாடு, அனைவருக்கும் கல்வி, நம்பிக்கை மற்றும் வாய்ப்புக்களை அளிக்கும் வகையில் விளங்குகிறது. ஏழ்மை, அறியாமை, நோய்

போன்றவையே நம் எதிரிகள். மற்றவர்கள் அல்ல. நம்மை அடுத்துள்ளோர் அல்ல. நம் எதிரிகளை முறியடிப்போம். முன்னேறிச் செல்வோம். நாளை நமதே. நாடும் நமதே, எதிர்காலம் நமதே என்று கூறி விடை பெறுவதற்கு முன்னால் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு–பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

* * *


தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
CHIEF SECRETARIAT
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
CHIEF SECRETARIAT